# உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே




சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து

# மத்தேயு 25:21

21. அவனுடைய எஜமான் அவனை நோக்கி: நல்லது, உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய், அநேகத்தின்மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன், உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி என்றான்.

---

இதைக்குறித்து கர்த்தருடைய தீர்க்கதரிசியாகிய சகோ.பிரன்ஹாம் கூறுவதை நாம் வாசிக்கலாம்:

---

ஒருநாள் காலையில் இயேசுவும் அவரது மணவாட்டியும் பூமிக்குத் திரும்ப வரும்போது, இது தேவனுடைய பரதீசியாக அமைந்திருக்கும். அது, ஓ, என்னே!

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 63-0323 ஆறாம் முத்திரை

123. இயற்கையும் பூமியில் அசுசிப் பட்டுள்ளன. (தேவனே கிருபையாயிரும்!) உலகம் முழுவதும் பிரசவவேதனையி லுள்ளதாக ஏசாயா கூறியிருக்கிறான்.

என்ன காரணம்? அவள் ஆயிரம் வருட அரசாட்சிக்கென்று புது உலகத்தைப் பிரசவிக்க முற்படுகிறாள்.

அந்த உலகம் பாவமற சுத்திகரிக் கப்பட்டிருக்கும். அங்கு புதிய ஜனங்கள் வாழ்வார்கள். அது உண்மை.

அவர்கள் பாவம் செய்து பூமியை ஒருபோதும் அசுத்தப்படுத்தமாட்டார்கள். அது சரி.

உலகம் பிரசவவேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறது. நாமும் மணவாட்டியை உருவாக்குவதற்கென பிரசவ வேதனைப் பட்டுக்கொண்டிருக்கிறோம். எல்லாமே பிரசவவேதனையடைந்து வேதனை மிகுதி யால் அலறிக்கொண்டிருக்கிறது.

பாருங்கள், ஏதோ ஒன்று சம்பவிக்க இருக்கிறது என்பதனை இது காண் பிக்கிறது.

ஆகவே இந்த ஆறாம் வாதையின் சம்பங்கள் புதிய உலகத்தை உருவாக்கு கின்றது.

சகோதரனே, பூமியதிர்ச்சியினால் பூமி பிளவுண்டுபோகும், நட்சத்திரங்கள் குலுக் கப்படும், எரிமலைக் குழம்பு பூமியின் மையத்திலிருந்து மேற்பரப்புக்கு வரும். பூமி இவ்விதம் புதுப்பிக்கப்படும், பூமி

சுற்றிக்கொண்டு வரும்போது, எல்லாமே தவிடு பொடியாகிவிடும்.

124. ஒருநாள் காலையில் இயேசுவும் அவரது மணவாட்டியும் பூமிக்குத் திரும்ப வரும்போது, இது தேவனுடைய பரதீசி யாக அமைந்திருக்கும். அது, ஓ, என்னே!

ஆவிக்குரிய போரில் கலந்துகொண்ட வீரர்கள் அவர்களுக்கு அருமையானவர்க ளுடனும் நண்பர்களுடனும் இங்குமங்கும் உலாவுவர்.

பரம சேனையின் தூதர்கள் இசைக்கும் பாட்டுகள் ஆகாயத்தை நிரப்பும்.

“ஓ, உத்தமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, உனக்கென்று ஆயத்த மாக்கப்பட்டிருக்கும் உன் எஜமானனுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசிப்பாயாக. ஏவாள் பாவம் செய்து அதனை தோற்றுவிப்பதற்கு முன்பு இவ்வுலகம்

இவ்வாறே இருந்தது” என்பார். ஆமென். வ்யூ! ஆம். ஆறாம் முத்திரை ஏதோ ஒன்றை செய்யப்போகின்றது. ஆம் ஐயா! முழு உலகமே ஆயிரம் வருஷ அரசாட்சிக்காக பிரசவ வேதனைப்பட்டு அலறிக் கொண்டிருக்கிறது.

ஆனால் இப்போதைய உலகம் அசுத்தத்தினால் நிறைந்துள்ளது!

சில நாட்களுக்கு முன்பு இக்கூடாரத்தில் உலகம் விழுந்து போதல் என்பதைக் குறித்து பிரசங்கித்தது நினைவுக்கு வருகின்றது. அது முற்றிலும் சரியாகும். உலகத்தில் விழுந்து போகின்றது. எதனால் என்று பாருங்கள், அனைத்துமே அழித்துக் கொண்டிருக்கின்றன. இவ்வுலகில் எல்லாமே இடிந்துபோக வேண்டும். ஆம் ஐயா.

பதிவு செய்யும் தூதன் அங்கு கிறிஸ்துவின் பக்கத்தில் நின்று கொண்டு பார்த்துக் கொண்டிருந்தான். (இப்பொழுது இது ஒரு சொப்பனம் ஆகும்) அவர்களுடைய பெயர் அங்கே இருந்தன. ஜீவ புஸ்தகத்தில் அது காணப்பட்டது. இயேசு அவர்களைப் பார்த்து, “நல்லது” உத்தமும் உண்மையுள்ள ஊழியக்காரனே, உள்ளே “பிரவேசி” என்பார். அவர்கள் அங்கு சென்று கொண்டிருந்ததை நான் பின்னால் நின்று பார்த்தேன். அவர்கள் ஒரு புதிய உலகத்திற்குள்ளும், சந்தோஷத்திற்குள்ளும் பிரவேசித்தனர். “உலகத்தோற்றத்துக்கு முன்னால் உங்களுக்கென்று ஆயத்தமாக்கப்பட்ட கர்த்தருடைய சந்தோஷத்திற்குள் பிரவேசியுங்கள்” என்று இயேசு அவர்களிடம் கூறினார்.

## சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 63-0323 ஆறாம் முத்திரை

160. நான் சம்பவித்த ஒரு சிறு காரியத்தை உங்களிடம் கூற விரும்புகிறேன். இது ஒரு சொப்பனமாகும். நான் அப்பொழுது உறக்கத்திலிருந்தேன். நான் இதை இதற்கு முன்பு பகிரங்கமாக வெளியேக் கூறினதில்லை. ஒரு சிலருக்கு மாத்திரமே இதை நான் கூறியிருக்கிறேன். எனக்குத் தெரிந்த மட்டில் இதற்கு முன்பு நான் இதை பகிரங்கமாகக் கூறினதில்லை. மேற்கூறிய தரிசனம் கண்ட ஒரு மாதத்திற்குப் பிறகு, நான் நான் ஒரு சொப்பனம் கண்டேன். அது நியாயத்தீர்ப்பு அல்ல. சபையானது நியாயத்தீர்ப்புக்கு, அதாவது மணவாட்டி நியாயத்தீர்ப்புக்குள்ளாவதில்லை என்று நான் விசுவாசிக்கிறேன்.

அந்த சொப்பனத்தில், பரலோகத்தில் கிரீடங்கள் அளிக்கப்படும்போது நான் அங்கு இருந்தேன். பாருங்கள். ஒரு பெரிய சிங்காசனம் இங்கே வைக்கப்பட்டிருந்தது. இயேசு அதின் மேல் வீற்றிருந்தார். பதிவுசெய்யும் தூதனும் (Recording angel) மற்றவரும் அங்கு நின்றுகொண்டிருந்தனர். தந்தத்தால் செய்யப்பட்ட சுருள்வடிவமுள்ள ஒரு பிரமாண்டமான படிக்கட்டு அங்கு வைக்கப்பட்டிருந்தது. அங்கு நடந்து கொண்டிருந்ததை அங்கு கூடியிருந்த அனைவரும் காணத்தக்கவாறு அது அமைந்திருந்தது. நான் ஒரு பக்கத்தில் நின்று கொண்டிருந்தேன். நான் அந்தப் படிக்கட்டில் ஏறிச் செல்வேன் என்னும் எண்ணம் எனக்குச் சற்றேனும் இருக்கவில்லை. நான் அங்கு நின்றுகொண்டிருந்தேன்.

161. பதிவு செய்யும் தூதன் ஒரு குறிப்பிட்டப் பெயரைக் கூப்பிடுவான்.

அது எனக்குத் தெரிந்த பெயராயிருக்கும். பெயர் கூப்பிடப்பட்ட சகோதரன் சகோதரியுடன் அங்கு நடந்து வரும்போது நான் அங்கிருந்து பார்த்துக்கொண்டிருந்தேன். பதிவு செய்யும் தூதன் அங்கு கிறிஸ்துவின் பக்கத்தில் நின்று கொண்டு பார்த்துக் கொண்டிருந்தான். (இப்பொழுது இது ஒரு சொப்பனம் ஆகும்) அவர்களுடைய பெயர் அங்கே இருந்தன. ஜீவ புஸ்தகத்தில் அது காணப்பட்டது. இயேசு அவர்களைப் பார்த்து, “நல்லது” உத்தமும் உண்மையுள்ள ஊழியக்காரனே, உள்ளே “பிரவேசி” என்பார். அவர்கள் அங்கு சென்று கொண்டிருந்ததை நான் பின்னால் நின்று பார்த்தேன். அவர்கள் ஒரு புதிய உலகத்திற்குள்ளும், சந்தோஷத்திற்குள்ளும் பிரவேசித்தனர். “உலகத்தோற்றத்துக்கு முன்னால் உங்களுக்கென்று ஆயத்தமாக்கப்பட்ட கர்த்தருடைய சந்தோஷத்திற்குள் பிரவேசியுங்கள்” என்று இயேசு அவர்களிடம் கூறினார். பாருங்கள்? நான்

நினைத்தேன். 'ஓ' அவர்கள் சந்தோஷங் கொண்டு ஒருவரையொருவர் சந்தித்தது மலைகளையும் பெரிய ஸ்தலங்களையும் கடந்து செல்வது அற்புதமான காட்சி யல்லவா?' என்று நினைத்தவாறே நின்று கொண்டிருந்தேன்.

162. ஆனால் நான், "ஓ, அது அற்புதமானதல்லவா? மகிமை அல்லே லூயா!" என்று எண்ணி மேலும் கீழும் குதிக்க ஆரம்பித்தேன். அதன்பின், வேறொரு பெயர் அழைக்கப்படுவதை நான் கேட்டேன். அப்பொழுது, "ஓ, நான் அவரை அறிந்திருக்கிறேன். நான் அவரை அறிந்திருக்கிறேன். நான்.. அதோ அவர் அங்கே செல்கிறார்" என்று நினைத்தேன். இவ்விதமாக நான் அவரைக் கவனித்தேன். "நல்லது...கர்த்தருடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி..." அப்பொழுது நான், "ஓ தேவனுக்கு ஸ்தோத்திரம், தேவனுக்கு ஸ்தோத்திரம்" என்றேன். உதாரணமாக. "ஆர்மன் நெவில்" என்று அழைப்பார்கள்

என்று வைத்துக் கொள்வோம், பாருங்கள். அப்பொழுது நான், “அதோ, அந்த வயதான சகோதரன் நெவில் அவர் அங்கே இருக்கிறார்” என்பேன். பாருங்கள்? அவர் ஜனக் கூட்டத்திலிருந்து வெளியே வந்து, மேலே சென்றார். அப்பொழுது அவர், “உலகத் தோற்றத்துக்கு முன்னால் உனக் கென்று ஆயத்தமாக்கப்பட்ட கர்த்தரின் சந்தோஷத்துக்குள் பிரவேசி. அதற்குள் பிரவேசி” என்று கூறினார். அப்பொழுது முதிர்ந்த சகோதரன் நெவில் ரூபம் மாறி, அங்கு நடந்து சென்றார். சந்தோஷத்துடன் சத்தமிட்டுக் கொண்டே சென்றார். அப்பொழுது நான், “தேவனுக்கு மகிமை” என்று கூச்சலிடுவேன், நான் நின்று, அற்புதமான நேரத்தை உடையவனாய் என் சகோதரர் செல்லுவதைக் கவனித்து கொண் டிருந்தேன். அதன்பின்னர் அங்கு நின்று கொண்டிருந்த பதிவுசெய்யும் தூதன், “வில்லியம் பிரான்ஹாம்” என்று பெயரை வாசித்தான். நானும் நடந்து செல்ல

அழைக்கப்படுவேனென்று நான் நினைக்கவேயில்லை. ஆகையால் நான் சிறிது அச்சமுற்றேன். “ஓ, என்னே! நான் அதைச் செய்ய வேண்டுமா?” என்று நான் நினைத்தேன். நான் நடந்து செல்லும்போது அங்கு குழுமியிருந்த அனைவரும் என் முதுகில் தட்டி, [எப்படி தட்டுகிறார் என்பதை விளக்க சகோதரன் பிரான்ஹாம் அநேகமுறை தம்மிலேயே தட்டிக் காண்பிக்கிறார்—ஆசி.] “சகோதரன் பிரான்ஹாமே, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக!” என்றனர். அந்த பெரிய ஜனக் கூட்டத்தின் நடுவே நான் சென்றபோது, அவர்கள் இவ்வாறு என் முதுகில் தட்டிக் கொண்டிருந்தனர். [எப்படி தட்டுகிறார்கள் என்பதை விளக்க சகோதரன் அநேகமுறை தம்மிலேயே தட்டிக் காண்பிக்கிறார்.-ஆசி.] “சகோதரனே தேவன் உம்மை ஆசீர்வதிப்பாராக, சகோதரனே, தேவன் உம்மை ஆசீர்வதிப்பாராக” என்றனர்.

163. அப்பொழுது உங்களுக்குத் தெரியுமா? நான் ஒரு ஜனக்கூட்டத்திலிருந்து வருவதுபோன்று, “உங்களுக்கு நன்றி, உங்களுக்கு நன்றி, உங்களுக்கு நன்றி” என்று கூறிக்கொண்டே நடந்து செல்வது போல சென்றேன். நான் அந்தப் பெரிய தந்தப் படிக்கட்டின் மேல் நடந்து செல்ல வேண்டியவனாயிருந்தேன். நான் இவ்வாறு மேலேறிச் செல்ல ஆரம்பித்தேன். நான் முதற்படிக்கட்டில் கால் வைத்து நின்றேன். நான் எண்ணினேன். அவருடைய முகத்தை நான் நோக்கிப் பார்த்தேன். “அவரை நன்றாகக் காணட்டும்” என்று நினைத்தேன். எனவே நான் அங்கு நின்றேன். நான் என் கரங்களை இவ்விதம் வைத்திருந்தேன். இங்கே வேறு யாரோ ஒருவரின் கரம் என் கரத்தைப் பற்றியதுபோன்ற உணர்ச்சி ஏற்பட்டது. நான் திரும்பிப் பார்த்தபோது, ஹோப் பெரிய கறுத்த கண்களுடனும், கறுத்த கூந்தல் பின்புறம் தொங்கினவாறு வெள்

ளையங்கி தரித்தவளாய் அங்கு நின்று கொண்டிருந்தாள். நான் “ஹோப்” என்று அழைத்தேன். பின்பு வேறொரு கரம் என் இந்தக் கரத்தைப் பிடித்தது. நான் பார்த்தபோது மேடா, கறுத்த கண்களுடன், கறுத்த கூந்தல் பின்புறம் தொங்கினவாறு, வெள்ளையங்கி தரித்தவளாய் அங்கு நின்று கொண்டிருந்தாள், நான், “மேடா” என்றேன்.

164. இருவரும் ஒருவரையொருவர் இந்தவிதமாக நோக்கினர். அவர்கள். அவர்களிலிருவரும் என் கைகளைக் கோர்த்துக் கொண்டனர். நாங்கள் வீட்டுக்கு (Home) நடந்து சென்றோம். நான் உறக்கத்திலிருந்து எழுந்தேன். ஓ, நான் உறக்கத்தினின்று எழுந்து, நான் நான் ஒரு நாற்காலியில் அமர்ந்து அழ ஆரம் பித்தேன். உங்களுக்குத் தெரியுமா? அப் பொழுது நான், “ஓ, தேவனே, நான் சொப்பனத்தில் கண்டது உண்மையாகவே

நிறைவேறட்டும்" என்றேன். இவ்விரு வரும் என் வாழ்க்கையில் ஈடுபட்டு, குழந்தைகளைப் பெற்றனர். இதோ நாங்கள் மூவரும் பரிபூரணப்பட்ட புதிய உலகத்திற்குள் நடந்து சென்றோம். ஓ, என்னே! இல்லை, ஒன்றுமேயில்லை... ஓ, அது மிகவும் அற்புதமான ஒரு காரியமாய் இருக்கப் போகிறதே! அதை இழந்து போக வேண்டாம்! அதை இழந்துபோக வேண் டாம். ஓ, தேவக் கிருபையினால், உங்க ளால் செய்ய முடிந்த அனைத்தும் செய் யுங்கள், மற்றவைகளை தேவன் பார்த்துக் கொள்வார்.

அப்பொழுது அவர் வந்து, நம்முடைய கண்களிலிருந்து வழிந்தோடும் கண்ணீரைத் துடைத்துவிட்டு “அழ வேண்டாம். இப்பொழுது யாவும் முற்றுபெற்றாயிற்று. உலகத்தோற்ற முதற்கொண்டே உங்களுக்காக ஆயத்தமாக்கப்பட்டிருக்கிற கர்த்தருடைய சந்தோஷத்திற்குள் பிரவேசியுங்கள்" என்று கூறப்போவதை எண்ணிப்பாருங்கள்.

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 62-0121E
# ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம்

31. இப்பொழுது, நான் விவாகங் களைக் குறித்து எண்ணிப்பார்க்க விரும்பு கிறேன். ஒரு சில ஜனங்களுக்கு விவா கங்களை செய்து வைக்கும் சிலாக்கியம் எனக்கு உண்டாயிருந்தது.

நான் ஒரு வாலிபனையும், ஒரு வாலிபப் பெண்ணையும் பீடத்தண்டை கொண்டு வரும்போது, சபையினூடாக அவர்கள் வருவதைக் காண்பதைக் குறித்து நான் எண்ணிப்பார்க்கிறேன்.

அவள் தன்னுடைய கலியாண வஸ்திரத்தோடு, அழகாக, அவளுடைய முகத்தின்மேல் முக மறைப்பு மென்திரை தொங்கிக்கொண்டிருக்க, மணவாளனோ ஒழுங்கான ஆடை அணிந்து வாலிபமாக

முழு வீரியங்கொண்டவனாயிருக்க, அவர்கள் தங்களுடைய வாழ்க்கையின் மிகச் சிறப்பான நேரத்தில் அங்கே நடந்து வந்து அந்த விவாக உறுதிமொழியை எடுத்துக் கொள்கிறார்கள்.

அப்பொழுது அதைக் குறித்த இனிமையான ஏதோ ஒரு காரியம் உண்டு என்றே நான் எண்ணுகிறேன். அது புனிதமான ஒரு காரியமாயிருக்கிறது, ஏனென்றால் அதுவோ கிறிஸ்துவினுடைய மணவாட்டி மகிமையின் தாழ்வாரங்களில் நடந்து செல்லும்போது, என்றோ ஒரு நாள் மற்றொரு மகத்தான விவாகம் உண்டா யிருக்கும் என்பதையே எனக்கு நினை வூட்டுகிறது.

மணவாளன் ஒவ்வொரு காரியத்தை யும் ஆயத்தம் செய்திருப்பார். அப்பொ ழுது ஒரு கலியாணமும், கலியாண விருந்தும் இருக்கும்.

அப்பொழுது நாம் மேஜையின் அருகே அமர்ந்து, ஒருவரோடு ஒருவர் கரங்களைக் குலுக்க, கண்ணீர் நம்முடைய கன்னங்களிலிருந்து வழிந்தோடுவதைக் குறித்து எண்ணிப்பார்க்க எப்படியாய் நாம் பற்றார்வங்கொள்கிறோம்.

அப்பொழுது அவர் வந்து, நம்முடைய கண்களிலிருந்து வழிந்தோடும் கண்ணீரைத் துடைத்துவிட்டு "அழ வேண்டாம். இப்பொழுது யாவும் முற்றுபெற்றாயிற்று. உலகத்தோற்ற முதற்கொண்டே உங்களுக்காக ஆயத்தமாக்கப்பட்டிருக்கிற கர்த்தருடைய சந்தோஷத்திற்குள் பிரவேசியுங்கள்'' என்று கூறப்போவதை எண்ணிப் பாருங்கள்.

ஓ, சகோதரனே, அது நம்மை ஒருவருக்கொருவர் அதிகமாக அன்புகூரச் செய்யும்.

எனக்கு அங்கிகளும், கிரீடங்களும், மாளிகைகளும் வேண்டாம். அவரைப் பார்த்துக்கொண்டிருக்க மாத்திரமே எனக்கு விருப்பம். உங்களுக்கும் அதே விருப்பம் உள்ளதல்லவா?

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: 61-1015E மரியாதைகள்

10. அந்த வயோதிபர் அநேக ஆண்டு களாக பிரசங்கித்து வந்தார். பின்பு ஒரு நாள், நாமெல்லாரும் நமது பாதையின் முடிவை அடைவது போல் அவரும் அடைந்தார். அவர் அநேக மணி நேரம் சுய நினைவற்று கிடந்தார். அவருடைய வெள்ளை சகோதரரில் அநேகர் அவரைக் காண வந்திருந்தனர். அவர் உணர் வடைந்து விழித்தபோது, ஒருகூட்டம் ஜனங்கள் அவரைச் சூழ இருந்தனர். அவர் சுற்று முற்றும் பார்த்து விட்டு,“இன்னுமா முடியவில்லை?'' என்று கேட்டார். அவர் கள், ''சாம், நீர் உறங்கிக்கொண்டிருந்தீர்' என்றனர். அவர், 'இல்லை, நான் உறங்க வில்லை. நான் அக்கரைக்கு சென்றிருந் தேன்'' என்றார். அங்கு குழுமியிருந்த

போதகர் சகோதரர்கள், ''சாம், அக்கரையில் என்ன கண்டீர் என்று கூறும்' என்றனர். அவர், ''நான் முத்துக்கள் பதித்த அந்த பெரிய வெள்ளை வாசலுக்குள் நடந்து சென்றேன். அப்பொழுது வெள்ளை சிங்காசனத்தையும் அவரையும் கண்டேன். தேவதூதன் ஒருவன் வந்து, 'நீ தான் சாம் என்பவனா?“ என்றான். நான், “ஆம்” என்றேன். அவன், ''சாம், இங்குள்ள அங்கி யையும் கிரீடத்தையும் கண்டாயா? நீ பூமியில் செய்த மகத்தான பணியின் நிமித்தம் இவைகளைப் பரிசுகளாக வென்றுவிட்டாய்'' என்றான். அவர், ''அங்கி, கிரீடம் போன்ற பரிசுகளைக் குறித்து என்னிடம் பேச வேண்டாம்'' என்றார். தேவதூதன், 'அப்படியானால் உனக்கு என்ன பரிசு வேண்டும்?''என்று கேட்டான். அவர், 'அவரை ஆயிரம்

ஆண்டுகள் பார்த்துக்கொண்டிருக்க மாத்திரம் அனுமதித்தால் போதும்“ என்றார்.

11. நாம் அனைவருக்குமே அது போன்ற உணர்வுதான் உள்ளதென்று கருதுகிறேன். உங்களுக்கும் இருக்கிறதல்லவா? எனக்கு அங்கிகளும், கிரீடங்களும், மாளிகைகளும் வேண்டாம். அவரைப் பார்த்துக்கொண்டிருக்க மாத்திரமே எனக்கு விருப்பம். உங்களுக்கும் அதே விருப்பம் உள்ளதல்லவா? சகோ.நெவில், அப்படி செய்யும்போது, உங்களுடன் கைகோர்த்துக்கொள்ள விரும்புகிறேன். நாம் ஒருமித்து அவரைப் பார்த்துக்கொண்டிருக்கும் போது, நான், 'சகோ.நெவில், யோசித்து பாருங்கள், நாம் கூடாரத்தில் ஒன்றாக இருந்தோம். அங்கு வெயிலும் குளிருமாய் இருந்தது. இப்பொழுது நாம் யாரைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம் என்று கவனியுங்கள், ஜீவனுள்ள தேவ

னுடைய குமாரனை“ என்பேன். அவருடைய முகச்சாயலைக் காண்பது மிகவும் அற்புதமாயிருக்கும் அல்லவா?

12. என் வாழ்க்கையில் இருமுறை - இதுவரை மூன்று முறை - அவரை தரிசனத்தில் கண்டிருக்கிறேன். ஒவ்வொரு முறையும் அவர் ஒரேவிதமான தோற்றத்தை உடையவராயிருந்தார். அவருடைய உருவத்தைவரைய இவ்வுலகில் எந்த ஓவியனும் இல்லை. அவர்கள் ஒருக்கால் அவரைப்போல் காணப்படும் ஒரு படத்தை வரையலாம். அவர் எனக்கு எப்படி தோற்றமளித்தார் என்றால், அவர் பேசினால் உலகம் முடிவடையும் என்பது போன்ற ஆண்மைத்தனம் கொண்டவராயும், அதே சமயத்தில் இனிமையாகவும் அழகாகவும் காணப்பட்டார். அதற்கு இணையேயில்லை .... ஒரு ஓவியன் தன் துரிகையினால் (brush) தீட்டமுடியாத

அளவுக்கு அநேக சிறப்பு அம்சங்கள் அவருக்குள்ளன. அவரை என்றாவது ஒரு நாள் முகமுகமாக நான் நிச்சயம் காண விரும்புகிறேன்.

13. அவர்தமது விலையேறப்பெற்ற கரங்களையுயர்த்தி, ''என்னிடத்தில் வாருங்கள்'' என்று கூறினதை கேட்க எனக்கு எவ்வளவு விருப்பம் என்று நான் அடிக்கடி நினைப்பதுண்டு. அவர் பயணம் செய்து களைத்துப்போய், அந்த களைப்பான தோற்றத்துடன், 'வருத்தப்பட்டுப் பாரஞ் சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்'' (மத்.11:28-29) என்று கூறினதை கற்பனை செய்து பாருங்கள்.

அப்படி அவர் கூறினதை எனக்கு கேட்க விருப்பம். அந்த நாளில் நான் இருக்க வில்லை. நான் பேதுரு, யாக்கோபு, யோவான் இவர்களுடன் நின்று கொண் டிருக்கவில்லை. ஆனால், 'நல்லது, உத்தம மும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி'' (மத். 25:21) என்று அவர் கூறுவதை அவர்களுடன் கூட நின்று கொண்டு கேட்பேன் என்று நம்புகிறேன்.

14. இந்த வேதாகமத்தை எழுதின பவுல், ஏசாயா, எரேமியா, இன்னும் அப்போஸ்தலர்கள் அனைவரும், அந்த விலையேறப் பெற்ற சகோதரர்கள், இப்பொழுது எங்கிருந்தாலும் ...தேவன் அவர்களுடன் ஈடுபாடு கொண்டு, அவர்கள் காரியங்களை முன்கூட்டி காணவும், அதை எழுதிவைக்கவும் செய்து, வேதத்தில் உரைக்கப்பட்டுள்ள வரங்களா

கிய தீர்க்கதரிசனம் உரைத்தல், அந்நிய பாஷை பேசுதல், அற்புதங்களும் அடை யாளங்களும் செய்தல் போன்றவைகளை அவர்களுக்கு அருளினார். அந்த மனிதர் கள், இப்பொழுது எங்கிருந்தாலும்; அவர் களுடன் கூட நாமும் இருக்கப்போகின் றோம். அதே தேவன் அதே காரியங்களை இப்பொழுது செய்து வருகிறார், ''நான் ஊகிக்கிறேன்“ என்று இனி அல்ல, அதை நாம் திட்டவட்டமாக அறிந்துள்ளோம். அவர் இருக்கிறார் என்று நாம் உறுதியாக அறிந்துள்ளோம். எனவே நாம் உலகி லுள்ள அனைவரிலும் மிக்க மகிழ்ச்சியுற்ற ஜனங்களாக இருக்க வேண்டும். அல்ல வா? இதைக் காட்டிலும் நமக்குவேறென்ன ஆவல்?

# நித்திய ஜீவன் பிறருக்காக வாழ்வதே



நீங்கள் சபைக்குச் சென்று நல்ல காரியங்களைச் செய்வதாக கூறலாம். அது நல்லது. ஆனால் நீங்கள் உங்களுக்கென வாழ்ந்தால், உங்களுக்கு நித்திய ஜீவன் இல்லை. நித்திய ஜீவன் பிறருக்கு வாழ்வதே.

சகோ. பிரன்ஹாம்

செய்தி: கல்வாரியில் அந்த நாள், செப்டம்பர் 25, 1960, பத்தி எண் 79

**சும்மா உட்கார்ந்து கொண்டிருக்காதிர்கள். நாம் ஏதாவதொன்றை செய்து கொண்டிருப்போம்**

~~~~~~~~~~~

இங்குள்ள உங்களில் அநேகர், உங்கள் வாழ்வில் அழைப்பைப் பெற்ற தேவனுடைய மனிதர், நீங்கள் ஏதாவதொன்றைச் செய்து கொண்டிருக்கலாம். சும்மா உட்கார்ந்து கொண்டிருக்காதீர்கள். நாம் ஏதாவதொன்றை செய்து கொண்டிருப்போம். நீங்கள் ஒரு ஆத்துமாவையாவது இரட்சிப்புக்குள் கொண்டு வராமலிருந்தால், அந்த ஒரு ஆத்துமாவை இரட்சிப்புக்குள் கொண்டு வாருங்கள். நாம் ஒவ்வொருவருமே.

செய்தி: *இயேசுவின் பட்சம் சேர்ந்திருத்தல்*, 62-0601
~~~~~~~~~~~

# உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து